දුරකථන ) 0112669192 , 0112675011
தொலைபேசி ) 0112698507 , 0112694033
Telephone ) 0112675449 , 0112675280

ෆැක්ස් ) 0112693866
பெக்ஸ் ) 0112693869
Fax )0112692913

විද්‍යුත් තැපෑල ) postmaster@health.gov.lk
மின்னஞ்சல் முகவரி )
e-mail )

වෙබ් අඩවිය ) www.health.gov.lk
இணையத்தளம் )
website )

සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA

මගේ අංකය )TA/06/SP/04/2015
எனது இல )
My No. )

ඔබේ අංකය )
உமது இல )
Your No. : )

දිනය )
திகதி )
Date ) 2016.12 09

# සෞඛ්‍ය, පෝෂණ සහ දේශීය වෛද්‍ය අමාත්‍යාංශය
# சுகாதார,போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு
# Ministry of Health, Nutrition & Indigenous Medicine

பொது சுற்றறிக்கை இலக்கம் 01-70/2016

சகல மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு செயலாளர்கள்,
சகல மாகாண சுகாதார செயலாளர்கள்,
இலங்கை தேசிய வைத்தியசாலையின் பிரதிப்பணிப்பாளர் நாயகம்,
சகல மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்,
மத்திய அரசின் கீழுள்ள சகல வைத்தியசாலை பணிப்பாளர்கள் மற்றும்
நிறுவனத்தலைவர்கள்,

**<u>மொழி சிகிச்சையாளர் பதவியை மருத்துவ விடயங்களுக்கான நிறைவுகாண் தொழில்வல்லுனர் சேவைக்கு உள்ளீர்த்தல் மற்றும் MT 06 – 2006 A சம்பள நிலை வழங்குதல்.</u>**

மேற்படி தலைப்பில் கௌரவ சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சரினால் 2016.07.28 ஆம் திகதி சமர்ப்பக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு உரிய அமைச்சரவை செயலாளரின் அமப/16/1535/718/068 இலக்கம் கொண்ட 2016.08.24 ஆம் திகதிய கடிதத்தினூடு அறிவிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம், 2016.08.16 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக்கூட்டத்தில் கீழுள்ள விடயங்களுக்காக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(i) அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் கடைசிப்பந்தியில் முன்மொழியப்பட்டதன் பிரகாரம், மொழி சிகிச்சையாளர் பதவியை மருத்துவ விடயங்களுக்கான நிறைவுகாண் தொழில்வல்லுனர் சேவைக்கு உள்ளீர்த்தல் மற்றும் MT 06 – 2006 A சம்பள நிலை வழங்குதல்

(ii) இவ்விடயம் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் அவதானிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம், மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள தீர்மானம் மாகாணங்களின் கீழ் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கும் வழங்குதல்.

02. ,அதன் பிரகாரம் மொழி சிகிச்சையாளர் பதவியை மருத்துவ விடயங்களுக்கான நிறைவுகாண் தொழில்வல்லுனர் சேவையொன்றாக கருதுவதற்கும், அச்சேவைக்கு உரித்தான MT 06 – 2006 A சம்பள முறை 2006.01.01 ஆம் திகதியிலிருந்து வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு இத்தால் அறியத்தருகின்றேன்.

| | | | |
|---|---|---|---|
| உரிய அரச நிர்வாக சுற்றறிக்கை | 06/2006 | 06/2006(IV) | 03/2016 |
| சம்பள அளவு | MT 06 – 2006 | MT 06 – 2006 (A) | MT 06 – 2016 |
| நடைமுறைப்படுத்த வேண்டிய திகதி | 2006.01.01 | 2007.06.01 | 2016.01.01 |

03. அதன் பிரகாரம் 2006.01.01 ம் திகதியில் இருந்து MT-5-2006 சம்பளநிலையின் III,II மற்றும் I தரங்களின் கீழ் சம்பளம் பெறுகின்ற மொழி சிகிச்சையாளர்கள் MT-6-2006 சம்பள படியின் நிறுவப்பட்டு, அரச நிர்வாக சுற்றறிக்கை 06/2006 இன் 3வது பிரிவின் கீழ் சம்பள மாற்றம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

04. இந்த சம்பள மாற்றத்தின் காரணத்தினால் உத்தியோகத்தர்களின் சம்பள ஏற்றத்தினங்களில் மாற்றம் ஏற்படக்கூடாது என்பதுடன், அத்தினம் உள்ளீர்ப்பு செய்வதற்கு முன்பிருந்த தினமாக மாற்றம் இன்றி செயற்படுத்தப்பட வேண்டும்.

அனுர ஜயவிக்கிரம
செயலாளர்,
சுகாதார,போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு.

Anura Jayawickrama
Secretary
Ministry of Health, Nutrition & Indigenous Medicine
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha.
Colombo 10, Sri Lanka.

பிரதிகள் :

01. செயலாளர், தேசிய சம்பள ஆணைக்குழு - தகவலுக்காக
02. தாபன பணிப்பாளர் நாயகம் - அரச நிர்வாக முகாமைத்துவ அமைச்சு - தகவலுக்காக
03. செயலாளர் அரச சேவைகள் ஆணைக்குழு - தகவலுக்காக
04. பணிப்பாளர் நாயகம் - முகாமைத்துவ சேவைத் தணைக்களம் - தகவலுக்காக